10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 02 அதிர்வு 18 வெள்ளிக்கிழமை 18 மே 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18

# மே18

## நினைவேந்தல் இன்று




யாழ்ப்பாணம், மே 18

முள்ளிவாய்க்கால் படுகொலை நாள் நினைவேந்தல் நிகழ்வு இன்றைய தினம் பேரெழுச்சியுடன் முள்ளிவாய்க்காலில் மேற்கொள்ளப்படவுள்ளது.

முள்ளிவாய்க்கால் படுகொலைகளின் 9 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, மே 18ஆம் நாளை, துக்கநாளாகவும், தமிழினப் படுகொலை நாளாகவும் வடக்கு மாகாண சபை பிரகடனம் செய்துள்ளது. தமிழினப் படுகொலைகள் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் மண்ணில் வழக்கம் போலவே, இன்று பாரிய நினைவேந்தல் நிகழ்வுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 06

## வேகம் போதாது பிரிட்டன் ஏமாற்றம்




கொழும்பு, மே 18

சர்வதேச கட்டப்பாடுகளை நிறைவேற்றும் விடயத்தில் இலங்கையின் வேகம் போதாது என்று பிரித்தானியா ஏமாற்றம் வெளியிட்டுள்ளது. பிரித்தானிய அமைச்சர் மார்க் பீல்ட் இதனை தெரிவித்துள்ளார்.

லண்டனில் இடம்பெற்ற பொது நலவாய மாநாட்டின் போது இலங்கை வெளிவிவகார அமைச்சருடன் 06

## படையினரை நினைவு கூரவேண்டும்



கொழும்பு, மே 18

நாட்டுக்காக தமது உயிர்களை தியாகம் செய்த இராணுவ வீரர்களை நினைவு கூர்வது மக்கள் அனைவரதும் கடமை யாகுமென முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின்போது நாட்டுக்காக உயிர் தியாகம் செய்த ஒவ்வொரு வீரர்களையும் அதன்போது உயிரிழந்த மக்களையும் நினைவு கூர்வதற்கான தினம் மிகவும் அவசியமாகு மெனவும் அவர் சுட்டிக்காட்டி யுள்ளார். 06

## அரசியலுக்காக கதைக்கிறார் அமைச்சர் மனோ



யாழ்ப்பாணம், மே 18

போர்க் குற்றம் தொடர்பாக உள்ளக விசாரணைகள் மட்டும் போதுமானது என்று நல்லிணக்க அமைச்சர் மனோ கணேசன் கூறியிருப்பது அவரது அர சியல் காரணங்களுக்காகவே என்று வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கி னேஸ்வரன் தெரிவித்துள்ளார். 06

## மதுபோதை பெண்ணுக்கு பிடியாணை


யாழ்ப்பாணம், மே 18

யாழ்ப்பாணம் நீதித்துறை வரலாற் றில் முதன்முறையாக மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் இளம் பெண் ஒருவருக்கு எதிராக யாழ்ப் பாணம் நீதிவான் நீதிமன்றில் குற்றப்பத் திரம் தாக்கல் செய்யப்பட்டது.

கோப்பாய் பொலிஸாரால் குற்றப் பத்திரம் நேற்று தாக்கல் செய்யப்பட்டு வழக்கு திறந்தமன்றில் அழைக் கப்பட்ட போதும் குற்றஞ் 06

## செல்கள் சடசட இராணுவம் தறதற

### முள்ளிவாய்க்கால் கொடூரத்தை எழுதிய மாணவன்



முல்லைத்தீவு, மே 18

பாடசாலை மாணவன் ஒருவர் முள்ளி வாய்க்காலின் கொடிய நினைவுகளை தன் பாடக்குறிப்பு புத்தகத்தில் எழுதியுள்ள நிகழ்வொன்று முல்லைத்தீவில் இடம்பெற் றுள்ளது.

நேற்றுமுன்தினம் ஆசிரியர் ஒருவர் தமிழ் பாடத்தில் இரட்டைக் கிழவி குறித்து தனது வகுப்பு மாணவர்களுக்கு கற்பித் துள்ளார். இதன்போது இரட்டைக் கிழ வியை உபயோகப்படுத்தி வாக்கியங்களை அமைக்குமாறு 06

## ரோசிக்கே இவ்வளவு! பிரதமருக்கு?

கொழும்பு, மே 18

கொழும்பு மேயரின் வீட்டி லுள்ள மலசல கூடத்தை திருத்தம் செய்வதற்காக 57 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், மேயரின் மலசல கூடத்துக்கே இவ்வளவு தொகை என்றால் பிர தமரின் மலசல கூடத்துக்கு எவ் வளவு செலவாகும்?

என கூட்டு எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர் 06

## வடக்கில் பலமடையும் தமிழீழக் கொள்கை

### ஜாதிகஹெல உறுமய கலக்கம்

கொழும்பு, மே 18

நல்லாட்சி அரசாங்கம் ஏற்படுத் திக் கொடுத்துள்ள ஜனநாயக சூழலை பயன்படுத்தி வடக்கில் மீண்டும் தமிழீழக் கொள்கை பலமடைந்து வருகின்றது என ஜாதிக ஹெல உறுமய கட்சி தெரிவித் துள்ளது.

இன்றையதினம் வடக்கில் இடம்பெறும் நினைவு தினங்கள் குறித்து ஜாதிக ஹெல உறு மயவின் இணைச் செயலாளர் மற் றும் ஊடகப்பேச்சாளர் நிசாந்த ஸ்ரீ வர்ணசிங்க 06

## தீபமேந்திய ஊர்தியில் சுடரேற்றிய வெளிநாட்டுப் பெண்




வவுனியா, மே 18

வவுனியாவை வந்தடைந்த முள்ளிவாய்க்கால் நினை வேந்தல் தீபமேற்றிய ஊர்தி நேற்று பிற்பகல் வேளை பசார் வீதியில் பொதுமக்கள் மற்றும் வர்த்தக நிலையங்களிலுள்ள வர்த்தகர்கள் சுடர் ஏற்று 06

## தமிழர் மீதான இன அழிப்பின் உச்சக் கட்டமே முள்ளிவாய்க்கால்



யாழ்ப்பாணம், மே 18

"சிங்கள பேரினவாத அரசு, தமிழரின் தாற்பரியமான தமிழ்த் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை அடக்குவ தற்கு கையாண்ட இன அழிப்பு நடவடிக்கையின் உச்சமே முள் ளிவாய்க்கால் இனவழிப்பு" என தமிழ்த் தேசிய மக்கள் முன்ன ணியின் யாழ்.மாநகர சபை உறுப்பினர் வரதராஜன் பார்த்தீபன் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பாக 06

## நினைவேந்தலுக்கு செல்ல போக்குவரத்து வசதி

யாழ்ப்பாணம், மே 18

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு வடக்கின் 5 மாவட்டங்களிலிருந்தும் பேருந் துகள் செல்லவுள்ளன. பேருந்துகள் புறப் படும் இடம், செல்லும் பாதை தொடர்பி ல் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக் னேஸ்வரனால் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் அனைத்துப் பேருந்துகளும் காலை 7.30 மணியளவில் முள்ளிவாய்க்காலுக்குப் புறப்படும். காரைநகரில் இருந்து ஒரு பேருந்து சுழிபுரம் ஊடாக 06

நஞ்சற்ற விவசாயத்துக்கு

# சந்தையில் நல்ல மதிப்பு

மட்டக்களப்பு, மே 18

நஞ்சற்ற விவசாய செய்கைக்கு சந்தையில் நல்ல மதிப்பு உள்ளது. இதனைச் செய்வதற்கு அனைவரும் முன்வர வேண்டும் என்று பிரதி அமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி தெரிவித்துள்ளார்.

கிராமியப் பொருளாதார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் விவசாய சங்கங்களுக்கு நீர் இறைக்கும் கருவிகள் வழங்கும் நிகழ்வு, மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"எதிர்காலத்தில் கல்குடாப் பிரதேசத்தில் உள்ள மீன்பிடி மற்றும் விவசாய சமூகங்களுக்கு பல்வேறு உதவித் திட்டங்களை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம். ஊர் ரீதியான பற்று மற்றும் ஊர் அரசியல் என்பன மாற்றப்பட வேண்டும். என்றோ ஒருநாள் உங்கள் பிள்ளைகளுக்கு இந்தப் பிரதேசத்தில் அரசியல் தலைமைத்துவத்தைக் கொடுக்க வேண்டும். இந்தக் கனவு அனைவரிடத்திலும் இருக்க வேண்டும்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

அவன்கார்ட் வழக்கு:

# மறியல் நீடிப்பு!

கொழும்பு, மே 18

அவன்கார்ட் கப்பலில் மிதக்கும் ஆயுதக் களஞ்சியசாலையை நடத்தியமை தொடர்பில், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அந்தக் களஞ்சியசாலையின் பொறுப்பாளர் மற்றும் செயற்பாட்டு முகாமையாளர் இருவரையும், எதிர்வரும் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு காலி பிரதான நீதிவான் ஏ. நிசாந்த பீரிஸ் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

குறித்த களஞ்சியசாலையின் பொறுப்பாளரான கேர்ணல் தொன் தோமஸ் எல்பட் விஜேதுங்க திலகரத்ன மற்றும் செயற்பாட்டு முகாமையாளர் மேஜர் மில்லனியகே சுமுது நிலுபுல் கொஸ்தா ஆகியோருடைய விளக்கமறியலே நீடிக்கப்பட்டுள்ளது. (ஆ)





# தோப்பூர் பிரதேசத்தில் மாட்டு வண்டிச் சவாரி

திருகோணமலை, மே 18

தோப்பூர் பிரதேச மக்களின் பாரம்பரிய விளையாட்டு நிகழ்ச்சிகளில் ஒன்றான மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி நிகழ்ச்சி, தோப்பூர் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் தோப்பூர், மூதூர், பள்ளிக்குடியிருப்பு, சம்பூர் போன்ற பல பிரதேசங்களைச் சேர்ந்த 35 மாட்டு வண்டிச் சொந்தக்காரர்கள் பங்கு பற்றியிருந்தனர். இந்த நிலையில், குறித்த போட்டியில் பள்ளிக்குடியிருப்பு பிரதேசத்தைச் சேர்ந்த எல்.விஜி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இந்த மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி மறைந்து போகாத வகையில், தோப்பூரில் ஒவ்வொரு வருடமும் இந்தப் போட்டி நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# வட, கிழக்கு அபிவிருத்திக்கு நல்லாட்சி அரசே வித்திட்டது!

## சொல்கிறார் ஒஸ்ரின்



கொழும்பு, மே 18

சமகால நல்லாட்சி அரசாங்கம் 2015 ஆம் ஆண்டு பதவியேற்றபின்னரே, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டது. யுத்தத்துக்குப் பின்னரான கடந்த கால ஆட்சியில் இந்த மாகாணங்களில் மேற்கொள்ளப்படவேண்டிய குளங்களை அபிவிருத்தி செய்வதற்கான திட்டம் முன்னெடுக்கப்படவில்லை என்று ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் கிராமசக்தி என்ற அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றது. இதன் போது, கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் கிராமசக்தி என்ற கிராமத்தை வலுவூட்டும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதில் 12 திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. வறுமையை ஒழித்து கிராமத்தை அபிவிருத்தி செய்வதே இந்த வேலைத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

விசேட தேவைகளைக் கொண்டோர் மற்றும் ஊனமுற்றோரை மேம்படுத்துவதற்கான தேசிய வேலைத்திட்டம், பாடசாலைகளுக்கான நிலையான அபிவிருத்தி வேலைத்திட்டம், சிறுவர்களை பாதுகாப்பதற்கான தேசிய வேலைத்திட்டம், சுற்றாடல் பாதுகாப்பு தேசிய வேலைத்திட்டம், கிராம மக்களுக்கான தேசிய வேலைத்திட்டம், பொலனறுவை எழுச்சி அபிவிருத்தி வேலைத்திட்டம், சிறிசற பிவிசும என்ற மாவட்ட அபிவிருத்தி வேலைத்திட்டம், தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டம்,தேசிய விவசாய வர்த்தக வேலைத்திட்டம், போதைப் பொருள் ஒழிப்பு தேசிய வேலைத்திட்டம், தேசிய கலாசார ஊக்குவிப்பு வேலைத்திட்டம் உள்ளிட்ட தலைப்பின் கீழ் இந்த கிராம சக்தி என்ற வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

வடக்கு, கிழக்கு, மலையகம் என்ற வகையில் வேறுபாடின்றி இந்தத் திட்டம் தேசிய ரீதியில்முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

இதற்காகப் பல மில்லியன் ரூபா இது வரையில் செலவிடப்பட்டுள்ளது. இந்த வேலைத்திட்டம் தொடர்பாக மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், அபிவிருத்தி அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பல தரப்பினருக்கு அரச சார்பற்ற மற்றும் பொதுஅமைப்புக்களுக்கும் அது தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இதன் முக்கிய நோக்கம் கிராம மட்டத்தில் வறுமையை ஒழிப்பதே ஆகும். தெரிவு செய்யப்பட்ட 300 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் இந்த வேலைத் திட்டம்முன்னெடுக்கப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டளவில் 500 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வறுமை ஒழிப்பை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. (ஆ)

# நாய் பிடிக்கும் பதவிகள் தற்காலிகமாக நிறுத்தம்

கொழும்பு, மே 18

கொழும்பு மாநகரசபையில் வெற்றிடமாக இருந்த நாய் பிடித்தல் மற்றும் நாய்களை அழித்தல் தொடர்பான பதவிகளுக்கு ஆட்களை இணைத்துக் கொள்வது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

சமூகவலைத்தளங்களில் இதற்கு எதிர்ப்புகள் தெரிக்கப்பட்டு வருவதால், அதனைக் கருத்திற்கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பு மாநகர சபையின் நகர ஆணையாளர் லலித் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

இந்தப் பதவிகள் உள்ளிட்ட 9 பதவிகளுக்கு ஆட்களை சேர்த்துக்கொள்வது தொடர்பான, விளம்பரங்கள் கடந்த வாரப் பத்திரிகைகளில் வெளியாகி இருந்தன. இந்த நிலையில், சமூக வலைத்தளங்கள் ஊடாக கொழும்பு மாநகரசபை விலங்குகளை கொல்வதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. ஆனால், நாய்களைக் கொல்வதற்கான பதவிகளுக்கு யாரையும் இணைத்துக்கொள்ளவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஆ)

# தேயிலைக்கான கேள்வி உலக சந்தையில் வீழ்ச்சி

கொழும்பு, மே 18

கிளைபோசேட் பாவனைக்கான தடை நீக்கப்பட்டுள்ளமையால், உலக சந்தையில் இலங்கைத் தேயிலைக்கான கேள்வி குறைவடைந்துள்ளதாக சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கிளைபோசேட் தடை நீக்கத்தால், நாட்டின் மொத்த தேயிலை ஏற்றுமதியில் 79 வீதத்தை கொண்டுள்ள தமது உற்பத்திகளின் விலையும் குறைவடைந்துள்ளதாக அந்தச் சங்கம் சுட்டிக்காட்டி உள்ளது.

அரசியல் செல்வாக்குள்ள சில தேயிலைத் தோட்ட நிறுவனங்கள், தமது வருமானத்தை தக்கவைத்துக்கொள்ளும் நோக்கில் கிளைபோசேட் தடைக்கான நீக்கத்தை பெற்றுக்கொண்டுள்ளதாக அந்த சங்கத்தின் தேசிய அமைப்பாளர் லால் பிரேமநாத் தெரிவித்துள்ளார்.

"சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் இயற்கைப் பசளைகள் மற்றும் அதற்கு இணையான பசளை வகைகளையே பயன்படுத்துகின்றனர், கிளைபேசைட்டை ஒருபோதும் பயன்படுத்துவதில்லை. கிளைபோசேட் தடை நீடிக்கப்பட வேண்டும். உற்பத்தியாளர்களுக்கு அரசாங்கம் உரமானியத்தை தொடர்ந்தும் வழங்க வேண்டும்." என்று மேலும் தெரிவித்துள்ளார். (ஆ)



# கிளிநொச்சி மாவட்டத்தில் 13 பாடசாலைகள் அபிவிருத்தி

கொழும்பு, மே 18

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 13 பாடசாலைகள் தென்கொரியாவின் கொய்கா அபிவிருத்தி செயற்றிட்டத்தின் மூலம், 7.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியில் அபிவிருத்தி செய்யப்பட உள்ளன.

இதற்கான ஒப்பந்தம் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன் முன்னிலையில், கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாராச்சி, தென்கொரியாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி வீடொங்கூ, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் ஏ.எம்.பி ரத்நாயக்க ஆகியோருக்கு இடையில் நேற்றுமுன்தினம் கைச்சாத்திடப்பட்டது.

இந்த நிகழ்ச்சி திட்டத்தின் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள பளை கண்டாவளை கரைச்சி பூநகரி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த கிளிநொச்சி இந்து ஆரம்பப் பாடசாலை பிரமந்தனாறு மகா வித்தியாலயம் இயக்கச்சி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை முழங்காவில் ஆரம்ப வித்தியாலயம் ஆகிய நான்கு பாடசாலைகளும் மாதிரி பாடசாலைகளாகவும் சென்.தெரேசா பெண்கள் கல்லூரி, கணகாம்பிகை குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, சிவாபாத கலையகம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, இராமநாதபுரம் (கிழக்கு) அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, பளை இந்து ஆரம்ப பாடசாலை சோரன்பட்டு இலங்கைக் கிறிஸ்தவ தமிழ் கலவன் பாடசாலை, முக்கம்பன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, கரியாலை நாகபடுவான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, இரணைதீவு ரோமன் கத்தோலிக்க கலவன் பாடசாலை ஆகிய ஒன்பது பாடசாலைகளும் அபிவிருத்தி செய்யப்பட உள்ளன.

இந்த அபிவிருத்தியில் பாடசாலை கட்டடங்கள் விசேட தேவை உடையோருக்கான வகுப்பு உபகரணங்கள் ஆசிரியர்கள், அதிபர்கள் ஆசிரிய ஆலோசகர்கள் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கான வெளிநாட்டு உள்நாட்டுப் பயிற்சிகள், மாணர்களுக்கான தொழில் வழிகாட்டல் கணனி தொழில்நுட்பம் ஆகிய விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட உள்ளது. இந்தத் திட்டத்திற்குதுக்கு 'கல்வி இயல் அளவை மேம்படுத்தும் செயற்றிட்டம்' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில், கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர்கள், பணிப்பாளர்கள் உள்ளிட்ட தென்கொரிய நாட்டின் கொய்கா நிறுவன அதிகாரிகளும்கலந்து கொண்டனர். (ஆ)

எதிரொலி
Ethiroli
வெள்ளி, 18 மே 2018 ethirolimedia@gmail.com

# வேண்டும் நீதி!

தமிழர்களின் வரலாற்றில் 'மே –18' அவ்வளவு இலேசாக மறந்துவிடக்கூடியதொன்றல்ல. 2009 க்கு முன்னர் வரை எப்படி ஜூலை மாதம் தமிழர்களின் மனதில் ஒரு கறுப்பு மாதமாகப் படிந்து போனதோ அதனை விடவும் பல மடங்கு வலியினைத்தந்த மாதமாக மே மாதத்தை மாற்றிவிட்டது முள்ளிவாய்க்கால் பேரவலம். முப்பது வருடங்களுக்கு மேலாக நிகழ்ந்துவந்த உரிமைப்போராட்டத்தை மட்டுமல்லாது அதற்கு உறுதுணையாக இருந்த பல்லாயிரக்கணக்கான பொதுமக்களையும் முள்ளிவாய்க்கால் விழுங்கிக் கொண்டது இந்த மே மாதத்தில்தான்.

வெளியுலகுடனான சகல தொடர்புகளையும் துண்டித்துவிட்டு, கடல் சார் சதுப்பு நிலத்தில் லட்சக்கணக்கான மக்களை முற்றுகைக்குள் கொண்டு வந்து, சர்வதேச நாடுகள் அள்ளிக் கொடுத்த குண்டுகளையும், சுடுகலன்களையும் இலங்கை அரசு பரிசோதித்துப் பார்த்து மகிழ்ந்தது. உலக நாடுகளில் தடை செய்யப்பட்ட பொஸ்பரஸ் குண்டுகள், கொத்துக் குண்டுகள் என்பன வன்னியெங்கும் தாராளமாக விசிறப்பட்டு, உயிர்களைக் காவு கொண்டன. எல்லாவற்றையும் அறிந்திருந்திருந்தும் ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளும், நாடுகளும் கண்ணை மூடிக்கொண்டு தம்பாட்டில் முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டன. இது இலங்கைப் படைகளுக்கு இன்னும் வசதியாகப் போனது.

குருதியாறு பெருக்கெடுத்து நந்திக்கடலின் நீர்மட்டத்தை உயர்த்திக் கொண்டேபோனது. பொஸ்பரஸ் குண்டுகளில் பொசுங்கிய உடலங்கள் வன்னி மண்ணெங்கும் நீக்கமற விதைக்கப்பட்டன. குண்டுகளில் இருந்து தப்பித்துக் கொண்டவர்களை குதறித்தீர்த்தன கொலைவெறிப்படைகள். பெண்களின் உடலங்கள் இராணுவத்தின் காமப்பசிக்கு இரையாக்கப்பட்ட பின்னர் உயிரற்றதாக்கப்பட்டு, கண் காணா இடங்களில் வீசப்பட்டன. சந்தேகத்துக்கிடமான ஆண்கள் நிர்வாணமாக்கப்பட்டு, கண்கள் கட்டப்பட்டு தலையில் வெடி வைத்து சிதறடிக்கப்பட்டனர் பிணங்களாக. தமிழினம் , இத்தனை நாளும் தன் கவசமாக வைத்திருந்த விடுதலைப்போராட்டத்தையும் ஆயுதங்களையும் வேறுவழியின்றி முள்ளிவாய்க்கால் பேரழிவோடு –மே 18 இல்–மௌனிக்கவேண்டியதாயிற்று.

ஒவ்வொரு மே 18 ஆம் திகதியும் போர் வெற்றி நாளாகக் கொண்டாடி மகிழ்ந்தது அரசு. இங்கே தமிழ் மக்கள் அழுவதற்கும் அனுமதியின்றி வேதனையில் துடிக்க, தென்னிலங்கையில் வெற்றிப்பட்டாசுகளின் ஒலி ஒவ்வொரு மே 18 இலும் ஒலித்துக் கொண்டிருந்தது. ஆயினும் மைத்திரி–ரணில் கூட்டாட்சியில், முள்ளிவாய்க்காலுக்குச் சென்று நினைவேந்த அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்குப் பிறகும் தனித்தனியாக அஞ்சலித்து 'தமிழ்ப் பொதுப்புத்தியின்' சிறுமைத்தனங்களைக் காட்டி வந்தோம். நல்லவேளையாக இம்முறை அதற்கும் முடிவு கட்டி ஓரணியில் அஞ்சலிக்க வழி பிறந்துள்ளது.

முள்ளிவாய்க்காலில் 2009இல் நிகழ்ந்த ஊழிக்கு இன்னும் நீதி கேட்கும் பொறிமுறை எமக்குச் சரிவரத் தெரியவில்லை. ஒரு சில புகைப்படங்களை மட்டும் வைத்துக் கொண்டு, ஒட்டுமொத்த உலகினதும் கருணைப் பார்வையை தன் பக்கம் திருப்ப சிரியாவால் முடிகின்றது. ஆனால் அதைவிடவும் கொடூரங்களையும், சாவுகளையும் சந்தித்த நம்மினத்தவர்களோ வெளிநாடுகளில் அகதி அந்தஸ்தைப் பெறுவதற்காகவே பெரும்பாலும், முள்ளிவாய்க்கால் கொடூரங்களை கையில் எடுக்கிறார்கள். மற்றும்படி எல்லோரும் அதை மறக்கத் தொடங்கிவிட்டார்கள்.

தன் கன்றுக்காக மனுநீதிச் சோழனின் மணியை அடித்து நீதி கேட்ட பசுவின் துயர் கூட, நம்மினம் சந்தித்த இனப்படுகொலையின் பின்னரும் கூட நமக்குள் உற்பத்தியாகவில்லை. நாமுண்டு, நம் வேலையுண்டு என்று வழமை போல இருந்து விடுகின்றோம். ஒரு சில அமைப்புக்களும், சில ஊடகங்களும் மட்டும், முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்த பிரளயத்துக்கு எப்படியேனும் நீதியை வாங்கி விடத் துடிக்கின்றன. ஆனாலும், இவற்றுக்கெல்லாம் அப்பால், அமெரிக்கா என்ற 'உலகக் கடவுள்' கருணை வைத்தால் மட்டுமே எதுவும் நடக்கும். அவர்களுக்குத் தேவையான போது , போர்க்குற்றச்சாட்டைத் தூக்கிப் பிடிப்பதும், காரியம் நடந்தவுடன் அதை மறப்பதுமாக அமெரிக்காவும் தந்திரமாகவே நடந்து கொள்கிறது. ஆனாலும் முள்ளிவாய்க்கால் மனித வேள்வியில் ஆகுதியாகிவிட்டவர்களின் ஆன்மாக்கள் நீதி கிடைக்கும்வரை அலைந்துகொண்டேதான் இருக்கப் போகின்றன. அந்த ஆன்மாக்களுக்காவது நீதி கோரி ஒன்றிணைந்து அஞ்சலிப்பதோடு, ஒருமித்துக் குரலும் கொடுப்போம்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# கஞ்சா உட்பட்ட பொருட்கள் யாழில் தீயிட்டு அழிப்பு

யாழ்ப்பாணம்,மே 18

யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் நிறைவடைந்த வழக்குகளின் 27 கிலோ கிராம் கஞ்சா உள்பட்ட சான்றுப் பொருள்கள் நேற்று தீயிட்டு அழிக்கப்பட்டன. 2016 ஆம் ஆண்டு நிறைவடைந்த போதைப் பொருள் கடத்தல், கொலை, கொள்ளை, வன்புணர்வு உள்ளிட்ட 15 வழக்குகளின் சான்றுப் பொருள்களே இவ்வாறு அழிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனின் உத்தரவில், நீதிமன்ற வளாகத்துக்கு முன்பாகவுள்ள அரச காணியில் போட்டு அவை எரிக்கப்பட்டன.

இந்த சான்றுப் பொருள்களில் சுமார் 25 இலட்சம் ரூபா பெறுமதியான 27 கிலோ கிராம் கஞ்சா போதைப் பொருள்களும் அடங்கும்.

இதேவேளை, சுமார் 10 கோடி ரூபா பெறுமதியான ஆயிரம் கிலோ கிராம் கஞ்சா போதைப் பொருள் கடந்த



நவம்பர் 23ஆம் திகதி நீதிமன்ற வளாகத்துக்கு அருகாமையுள்ள அரச காணியில் தீயிட்டு அழிக்கப்பட்டன. அவை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனின் உத்தரவில் அவர் முன்னிலையில் அழிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## அஞ்சலி




முள்ளி வாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு நேற்று வியாழக் கிழமை பிற்பகல் 4 மணியளவில் வல்வெட்டித் துறை நகரசபை மண்டபத்தில் நகரசபை தவிசாளர், உபதவிசாளர் மற்றும் நகரசபை உறுப்பினர்கள் சகிதம் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தினார்கள்.

## இலங்கை வந்த சீனப்பிரஜை மாயம்

இலங்கைக்கு வந்த ஒரு சில மணி நேரங்களிலேயே சீன பிரஜை ஒருவர் மர்மமான முறையில் காணாமல் போயுள்ளார். அவரைத் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் பொலிஸார் மற்றும் இராணுவம் என்பன ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

ஜியாங் டோ என்ற சீனப் பிரஜை மேலும் இரண்டு பேருடன், கடந்த 11ஆம் திகதி இரவு இலங்கைக்கு வந்திருந்தார். அவர்கள், தெற்கு அதிவேக நெடுஞ்சாலை விரிவாக்கப் பணிகளை முன்னெடுக்கும் நிறுவனத்தின் கட்டுமானப் பகுதிக்கு கடந்த 12ஆம் திகதி அதிகாலை சென்றிருந்தனர்.

தெனியாய காட்டுப் பகுதியில் சுற்றித்திரிந்த அவர், அன்று மாலை முகாமுக்குத் திரும்பவில்லை.

தேடுதல்களின்போது, காணாமல்போன சீனரின் அலைபேசி, மேற்சட்டை மற்றும் காலணிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

# விஜயகாந்துக்கு பிணைகோரி சீராய்வு மனுத் தாக்கல்

யாழ்ப்பாணம், மே 18

யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினரும் தண்டனைக் கைதியுமான சுந்தர்சிங் விஜயகாந்துக்கு மேன்முறையீட்டு மனு நிலுவையின் போதான பிணை கோரி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனு வரும் 30ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

இந்த சீராய்வு மனு நேற்று விசாரணைக்கு வந்த போது பிரதிவாதிகளுக்கு அறிவித்து அனுப்ப உத்தரவிட்ட மேல் நீதிமன்ற நீதிபதி, விசாரணையை வரும் 30ஆம் திகதிவரை ஒத்திவைத்தார்.

திருட்டு நகைகளை வங்கியில் அடகு வைக்க முற்பட்ட குற்றத்துக்காக, யாழ்ப்பாணம் மாநகர சபைக்கான தேர்தலில் உறுப்பினராகத் தெரிவாகியவரும் முற்போக்கு தமிழ் தேசியக் கட்சியின் செயலாளருமான சுந்தர்சிங் விஜயகாந்த் உள்ளிட்ட இருவருக்கு 2 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. அத்துடன், அதே குற்றத்துக்கு மேலும் ஒருவருக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் கடந்த மார்ச் 8ஆம் திகதி தீர்ப்பளித்தது.

குற்றவாளிகள் மூவரும் தலா 7 லட்சம் ரூபா இழப்பீட்டை நகையின் உரிமையாளருக்கு வழங்கவேண்டும். அதனைச் செலுத்தத் தவறின் 6 மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்கவேண்டும் என்று யாழ்ப்பாணம் நீதிவான் சி.சதீஸ்தரன் தீர்ப்பளித்திருந்தார்.

2013ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28ஆம் திகதியன்று வங்கியொன்றில் அடகு வைப்பதற்கு சுதர்சிங் விஜயகாந்த் சென்றிருந்தார். அந்த வங்கியில் கடமையாற்றும் அலுவலகரின் திருட்டுப் போன நகைகள் சுந்தர்சிங் விஜயகாந்திடம் காணப்பட்டன. அதுதொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் பொலிஸார், விஜயகாந்த் உள்ளிட்ட 4 பேரைக் கைது செய்தனர்.

விஜயகாந்த் உள்ளிட்ட நான்கு பேரும் மீது 116 பவுண் நகைகளைத் திருடியமை உள்ளிட்ட நான்கு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து கோப்பாய் பொலிஸாரினால் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கிலேயே சுந்தர்சிங் விஜயகாந்த் உள்ளிட்ட மூவருக்கு இந்த தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக சுந்தர்சிங் விஜயகாந்த் சார்பில் அவரது சட்டத்தரணி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் மேன்முறையீட்டு மனுத் தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவுக்கு அமைய மேன்முறையீட்டின் போதான பிணை விண்ணப்பத்தை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் சுந்தர்சிங் விஜயகாந்தின் துணைவியார் முன்வைத்தார். எனினும் அந்த பிணை விண்ணப்பத்தை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று நிராகரித்தது.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றால் நிராகரித்த விண்ணப்பம் தொடர்பில் சீராய்வு செய்யக் கோரி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சீராய்வு மனுவை விஜயகாந்தின் துணைவியார் தாக்கல் செய்துள்ளார்.

## இன்று நாளும் கோளும்

18.05.2018 வெள்ளிக்கிழமை விளம்பி வருடம் வைகாசி மாதம் 04 ஆம் நாள்

திருதியை பி.ப. 11.50 வரை | மிருகசீரிடம் மு.ப. 07.12 வரை | குளிகை மு.ப. 07.30–09.00

இராகுகாலம் 10.30– 12.00 | சுபநேரம் காலை 09.30 – 10.30 | எமகண்டம் 03.00 – 04.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சாந்தம் | போட்டி | ஆர்வம் | கவலை | தடங்கல் | சலனம் | பகை | ஆக்கம் | பரிசு | பயம் | தெளிவு | உதவி |

# 6 ஓயாக்களால் அபாயம்

கொழும்பு, மே 18

மல்வத்து ஓயா, தெதுரு ஓயா, கலா ஓயா, மீ ஓயா, மஹா ஓயா, அத்தனகல்ல ஓயா ஆகிய 6 நீரேந்து பிரதேசங்களின் நீர் மட்டம், மிக வேகமாக அதிகரித்து வருவதனால், மக்களை அவதானமாக இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனால், மேற்படி நீரேந்துப் பிரதேசங்களை அண்டியுள்ள மக்களை, நீர்ப் பெருக்கு ஏற்படும் பட்சத்தில் உடனடியாகப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு மேற்படி மத்திய நிலையத்தின் ஊடகப் பேச்சாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

தற்போது பெய்துவரும் தொடர் மழை காரணமாக, தெதுரு ஓயாவின் 6 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. அத்துடன், அத்தனகல்ல ஓயாவின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விடயங்கள் தொடர்பில் அறிந்துகொள்ள வேண்டுமாயின், 117 என்ற அவசர அழைப்புக்குத் தொடர்பை ஏற்படுத்தி, பொதுமக்களுக்கான தகவல்களைத் திரட்டிக்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஆ)

# 3 மணித்தியாலங்களுக்கு முன்னரே வாருங்கள்!

வெளிநாடுகளுக்குப் பயணம் செய்யும் பயணிகள், விமான நிலையத்தில் இருந்து புறப்படும் நேரத்துக்கு மூன்று மணித்தியாலங்கள் முன்னராகவே விமான நிலையத்தை வந்தடையுமாறு ஸ்ரீலங்கன் விமானச் சேவை அறிவித்துள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல்வு அலுவலர்கள் ஆரம்பித்துள்ள சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாகவே, இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று அந்த விமானச் சேவை குறிப்பிட்டுள்ளது. மீண்டும் அறிவிக்கும் வரை இந்த நடைமுறை தொடரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்காவில் உள்ள பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் கடமையாற்றும், குடிவரவு மற்றும் குடியகல்வு அலுவலர்களே, இவ்வாறு சட்டப்படி வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (ஆ)

# தென் மாகாணத்தில் மர்ம நோய்: ஒரு மாதத்தில் ஐவர் உயிரிழப்பு!

கொழும்பு, மே 18

தென் மாகாணத்தில் பரவி வரும் மர்ம நோயால், கடந்த ஒரு மாதத்தில் 5 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த நோய் தொடர்பில், சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த மர்ம நோய் அசாதாரணமாக நோயாளிகளின் சுவாச அமைப்பு முறையைப் பாதிக்கும் என கராபிட்டிய போதனா வைத்தியசாலை தெரிவித்துள்ளது.

"தென் மாகாணத்தில் மட்டுமே 5 பேர் உயிரிழக்கக் காரணமான இந்த மர்ம நோய்ய அடையாளம் கண்டுக்கொள்வதற்கான பரிசோதனைகளை சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு மற்றும் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் ஆகியன மேற்கொண்டுள்ளன.

காய்ச்சல், சுவாசப் பிரச்சினைகள் மற்றும் இருமல் போன்ற அறிகுறிகளே இந்த நோய்த் தொற்றுக்கான அறிகுறிகளாக இனங்காணப்பட்டுள்ளன.

இது ஒரு வகையான வைரஸால் ஏற்படும். இது தொடர்பில் மக்கள் அச்சப்படத் தேவையில்லை . இந்த மர்ம நோயில் இருந்து தென் மாகாண மக்களை பாதுகாப்பதற்கான சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. " என்று கராபிடிய போதனா வைத்தியசாலை வைத்தியர் ஜயம்பதி சேனநாயக்க தெரிவித்துள்ளார். (ஆ)

# சுகாதார சேவைகள் நாட்டில் ஸ்தம்பிதம்



கொழும்பு, மே 18

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் முன்னெடுத்துள்ள அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தால் நாடளாவிய ரீதியில் சுகாதார சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால், நோயாளர்கள் பெரும் அசௌகரியத்தை எதிர்நோக்கி உள்ளனர்.

சிங்கப்பூருடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் மற்றும் இந்தியாவுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட உள்ள எட்கா ஒப்பந்தம் ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த அடையாளப் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படுகின்றது.

நாட்டின் பெரும்பாலான அரச வைத்தியசாலைகளில், நேற்று வெளிநோயாளர் பிரிவு உள்ளிட்ட எவ்வித வைத்திய சேவைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக, வெளிநோயாளர் பிரிவு உள்ளிட்ட அனைத்து சேவைகளும் தடைப்பட்டுள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் சிறில் டி சில்வா தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், அவசர சிகிச்சைப் பிரிவு, அவசர சிகிச்சை அனுமதிகள், அவசர சத்திரசிகிச்சைகள் மற்றும் உளவியல் பிரிவு ஆகிய சேவைகள் இயங்குவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஆ)

# சிறுவர் வன்முறைகளைத் தடுக்க மட்டு நகரில் விரல் அடையாளம்





மட்டக்களப்பு, மே 18

18 நாட்கள் திட்டத்தின் கீழ், சிறுவர் வன்முறையைத் தடுக்கும் நோக்கில் ஒரு லட்சம் பேரின் விரல் அடையாளங்களைச் சேகரித்து, ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கும் செயற்பாடு மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு சிறுவர்களுக்கெதிரான வன்முறைகளைத் தடுக்கும் இளைஞர் சமூகத்தின் ஏற்பாட்டில், நேற்றுமுன் தினம் இந்த நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமாரிடம் முதல் விரல் அடையாளம் பெறப்பட்டது.

மாவட்ட செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த செயற்றிட்டத்தின் போது, விழிப்புணர்வு நாடகம் காண்பிக்கப்பட்டது. சிறுவர் வன்முறைகள் தடுக்கப்படவேண்டும், வன்முறையில் ஈடுபடுவோருக்கு உடனடியாகத் தண்டனை வழங்க வேண்டும், பாதுகாப்பான சமூகத்தை உருவாக்க வேண்டும் ஆகிய கோரிக்கைகள் முன்வைத்தே, இந்த விரல் அடையாளம் பெறும் நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆரம்ப நிகழ்வில் மாவட்டச் செயலகத்தின் திணைக்களத் தலைவர்கள், அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், வவுணதீவு அபிவிருத்தி அமைப்பின் பிரதம அதிகாரி எல்.ஆர். டிலிமா, திட்ட முகாமையாளர் தவராசா மாலதி, திட்ட அதிகாரிகளான கே.சதீஸ்குமார், அன்ரன் ஜெகன், ராஜரத்தினம், வவுணதீவுப் பிரதேச இளைஞர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஆ)

# விமானப் படை முகாமில் குண்டு வெடிப்பு

தியத்தலாவை, மே 18

தியத்தலாவை விமானப்படைப் பயிற்சி முகாமில் கைக்குண்டு வெடித்ததில், 3 பெண் விமானப்படை வீராங்கனைகள் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது.

பயிற்சி நடவடிக்கையின்போதே குறித்த கைக்குண்டு வெடித்துள்ளதாக விமானப்படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

படுகாயமடைந்தவர்கள் தியத்தலாவை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஆ)

# இலங்கை அகதிகள் துருக்கியில் கைது!



இலங்கையர் உள்ளிட்ட 476 சட்டவிரோதக் குடியேற்றவாசிகள், துருக்கியில் கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்று துருக்கி செய்தி இணையதளமான நியுஸ் ஒன் டர்கி (news on turkey) செய்தி வெளியிட்டுள்ளது.

இவர்கள் துருக்கியை நேற்றுமுன் தினம் கடக்க முற்பட்டபோதே, அந்த நாட்டுப் பாதுகாப்புப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். துருக்கி நாட்டின் கிழக்கு எலாசிக் (Elazig) மாகாண எல்லையில் புதிய மனிதர்கள் நடமாடு வதாகக் கிடைத்த தகவலுக்கு அமையவே , இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், இவர்கள் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் மற்றும் இலங்கையைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது. (ஆ)

## முள்ளிவாய்க்கால் படுகொலையை நினைவுகூரும் இரத்ததான முகாம்







முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையை நினைவுகூரும் முகமாக கிழக்குப் பல்கலைக்கழகக் கலை கலாசாரபீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று வியாழக்கிழமை இரத்ததான முகாம் நடைபெற்றது.

இதன்போது, கிழக்குப் பலக்லைக்கழக அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் இரத்த தானம் செய்தனர். (ஆ)

# கொடிய ஆயுதக்குழுவில் தலைமை வகித்தார் ராஜித!

## சொல்கிறார் விஜித ஹேரத்



கொழும்பு, மே 18

மக்கள் விடுதலை முன்னணி எந்தக் காலத்திலும் தீவிரவாத அமைப்பாக செயற்பட்டதில்லை. நாட்டில் 'பிரா' என்ற பெயரில் இயங்கிய கொடிய ஆயுதக் குழுவுக்கு தலைமை தாங்கிய ராஜித சேனாரத்ன போன்றோர் இப்படி பேசுவது கேலிக்குரியது என்று அதன் பிரசார செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் கடந்த கால செயற்பாடுகள், தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்புக்கு ஒத்ததாக காணப்பட்டதாக, அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில், அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்திருந்தார். அவரது இந்தக் கருத்துக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"நாட்டில் மக்கள் விடுதலை முன்னணி அங்கீகரிக்கப்பட்ட கட்சியாக அரசியலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது, அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர்.ஜெயவர்ன பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தி கட்சியைத் தடை செய்தார். எனினும், தொடர்ந்தும் மக்கள் விடுதலை முன்னணி அரசியலில் ஈடுபட்டது. மக்கள் விடுதலை முன்னணி நாட்டின் நியாயம் மற்றும் சமூக நீதிக்காக போராடும் அரசியல்கட்சி ஆகும்.

அன்றைய அரசாங்கம் பல்வேறு ஆயுதக் குழுக்களை உருவாக்கி மக்கள் விடுதலை முன்னணியை அடக்க முயற்சித்தது. அடக்குமுறைகளைப் பயன்படுத்தி மக்கள் விடுதலை முன்னணியை கட்டுப்படுத்த ஜே.ஆர். ஆட்சிக்காலத்தில் இயங்கிய குழுவே "பிரா" அமைப்பாகும். இந்த அமைப்பின் தலைவராக ராஜித சேனாரத்னவே செயற்பட்டார். இவர்கள் நாட்டின் இளைஞர்களை ஆங்காங்கே கொலை செய்தனர். இதற்கான பொறுப்பை ராஜித சேனாரத்ன ஏற்க வேண்டும். " என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

காணாமல் போனோர் அலுவலகத்தின்

# அடுத்த அமர்வு மாத்தறையில்!



கொழும்பு, மே 18

காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தின் அடுத்த அமர்வு மாத்தறையில் நாளை இடம்பெறவுள்ளது என்று அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

காணாமல் போனோர் அலுவலகத்தின் முதலாவது அமர்வு, மன்னாரில் கடந்த 12 ஆம் திகதி இடம்பெற்றது. இதன்போது, காணாமல் போனோர் அலுவலகத்தின் திட்டப் பணிகளை பகிர்ந்துகொள்வதற்காகவும், அலுவலகத்தின் எதிர்காலப் பணிகளை ஒன்றிணைப்பதற்காகவும் பொது மக்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் கேட்டறியப்பட்டன.

குறித்த சந்திப்பில் ஊடகத்துறையினர், காணாமல் போனவர்களின் உறவினர்கள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் காணாமலாக்கப்பட்ட விடயங்கள் தொடர்பிலான செயற்பாட்டாளர்கள் பங்கேற்றனர்.

இந்த நிலையி,ல் இதன் அடுத்த அமர்வு மாத்தறையில் இடம் பெறவுள்ளது. இதில், காலை 9.30 மணிக்கு காணாமல் போனவர்களின் உறவினர்களையும், முற்பகல் 11.30 மணி முதல் சிவில் சமூக அமைப்புகள் மற்றும் காணாமலாக்கப்பட்ட விடயங்கள் தொடர்பிலான செயற்பாட்டாளர்களையும் அலுவலக அதிகாரிகள் சந்திப்பார்கள் எனத் தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதில், காணாமல் போனோர் அலுவலகத்தின் தலைவர், ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தலைமையில் அலுவலகத்தின் ஆணையாளர்களான ஜெயதீபா புண்ணியமூர்த்தி, மேஜர் ஜெனரல் மொஹான் பீ பீரிஸ், கலாநிதி நிமல்கா பெர்னாண்டோ, மிராக் ரஹீம், சட்டத்தரணி சோமசிறி லியனகே மற்றும் கணபதிப்பிள்ளை வேந்தன் ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர். (ஆ)

# சமுர்த்தி தெரிவில் பேதம் இருக்காது

கொழும்பு, மே 18

கட்சி பேதமின்றி சமுர்த்திப்பயனாளிகள் தெரிவு செய்யப்படுவர் என்று சமூக வலுவூட்டல் அமைச்சர் பி.ஹரிஸன் தெரிவித்தார்.

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் சார்ந்த 22 தொழிற்சங்க அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"சமூக வலுவூட்டல் வேலைத்திட்டத்தில் காலத்துக்குப் பொருத்தமான மாற்றங்களை அறிமுகம் செய்து வறுமையை ஒழிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும். நிவாரணம் வழங்கும் திட்டத்தைச் சீராக்கி, அதில் அரசியல் மயமாக்கத்தை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இலங்கையில் இருந்து வறுமையை முற்றாக ஒழித்துக்கட்டும் வேலைத்திட்டத்தின் கீழ் மேலும் இரண்டு இலட்சம் குடும்பங்களுக்கு சமுர்த்தி அனுகூலங்களை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஆ)

# ஊவா ஆளுநர் கடமையேற்பு!

ஊவா மாகாண புதிய ஆளுநரான ஆரியபண்டார ரெகவ நேற்றுக் காலை உத்தியோகபூர்வமாக தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார் .

இந்த நிகழ்வில் ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தஸநாயக்க, ஊவா மாகாண சபை எதிர்க்கட்சி தலைவர் ஆர் அம் ரத்நாயக்க, ஊவா மாகாணசபை அமைச்சர் உபாலி டெல்டன் சமரவீர உள்ளிட்ட பலர்கலந்துகொண்டனர் (ஆ)

# பஸ் கட்டண அதிகரிப்புக்கு எதிராக முறைப்பாடு

கொழும்பு, மே 18

அமைச்சரவை முடிவுகள் மற்றும் தேசிய பஸ் கட்டணக் கொள்கை ஆகியனவற்றை மீறும் வகையில் முன்னெடுக்கப்பட்டுள்ள பஸ் கட்டண அதிகரிப்புக்கு எதிராக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைபாடு செய்ய உள்ளதாக நுகர்வோர் உரிமைகள் பாதுகாக்கும் தேசிய அமைப்பு தெரிவித்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அமைச்சரவையாலோ அல்லது ஜனாதிபதியாலோ மட்டுமே மாற்ற முடியும். ஆனால் இரண்டு அரசியல்வாதிகள் இந்த அமைச்சரவை முடிவுகளை மாற்றியுள்ளனர் என அந்தச் சங்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்துள்ளார்.

"அமைச்சரவை அனுமதியான்து தேசிய பஸ் கட்டண கொள்கைகளுக்கு அமைய கொண்டுவரப்பட்ட கட்டணமாகும். அதை மாற்றியதன் மூலம் தேசிய கொள்கைகள் மீறப்பட்டுள்ளன." என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஆ)



# மே 18...கண்ணிமைப் பொழுதேனும் மறக்க முடிந்தால்..?

இண்டைக்கு மே 18. இண்டையோடை சரியா ஒம்பது வருசங்கள். ஒவ்வொண்டையும் நினைச்சால், நேற்றைக்கு நடந்தமாதிரிக் கிடக்கு. காலமைதொட்டு தொண்டைக்காலை தண்ணி இறங்கமாட்டனெண்ணுது. வேதனைக்குமேலை வேதனை. முள்ளிவாய்க்காலுக்கு வாறியளோ எண்டு இரண்டு மூண்டு பேர் வந்து கேட்டபடி. போகவும் மனமாக்கிடந்திது. போனால் அந்த மண்ணை மிதிக்கேக்கை என்னையும் மீறி வாற நெஞ்சடைப்பை எப்பிடித் தாங்கிறது எண்டு யோசிச்சுப்போட்டுப் பேசாமல் இருந்திட்டன். அது மட்டுமில்லை தமிழ் இனப் பற்று எண்டிட்டு அங்கை வாற அரசியல்வாதியள் ஏதேன் குரங்குச்சேட்டை விட்டால் எல்லாத்தையம் விட என்னாலை அதைத்தாங்கேலாது. ஆக்களை இழந்த சோகத்தோடை வாற சனம் ஒரு பக்கம் இருக்க.., விடுப்புப்பாக்க எண்டும் சனம் வரும். வாற சனத்துக்குச் சமனாப் புலனாய்வுத் துறையும் வரும். அதோடை கலியாண வீட்டுக்குப் போற மாதிரி வெள்ளையும், சொள்ளையும் கட்டிக் கொண்டு கோடிக்கணக்காக் காசு குடுத்து வாங்கின பஜூரோக்களிலை பொலிஸ் பாதுகாப்போடை வால்பிடியளும் வருவினம். வந்துவிட்டுப் பேசாமல் போனாப் பறவாயில்லை அதுக்கை தங்கடை வரவைக் காட்டிற மாதிரி ஏதாவது செய்தால் அதையும் தாங்கேலாது.

அதிகிலும் பாக்க றோட்டுக் கரையிலை நிக்கிற மருதமரத்துக்குக் கீழை இருக்கிற வயிரவரடியிலை போய் இரண்டு செம்பரத்தம் பூவைப் போட்டு எங்களுக்காக உயிரை விட்ட எல்லாரையும் நினைச்சு இரண்டு சொட்டுக் கண்ணீரை விட்டிட்டு வந்தால்.. அது போதும் எண்டு நான் நினைக்கிறேன். முதலியும் அதைத்தான் சொல்லுறார்.

என்னத்தைச் சொன்னாலும் அதை மறக்கேலாமல் கிடக்கு. என்ரை ஐயோ ! எண்டு கத்த வேணும்போலை கிடக்கு. என்னத்தைச் செய்தாலும் சோகம் மாறாது. பசி தாங்கேலாமை செத்த பிணத்திலை பால் குடிச்சுக்கொண்டு கிடந்த பால்குடியின்ரை சோகத்தைச் சொல்லவோ? குண்டடிபட்டு அரை உயிராக் கிடந்த சனத்தின்ரை துன்பத்தையும் பாராது அவையின்ரை நெஞ்சை மிதித்துக் கடந்து போய் தங்கடை உயிரையும் காப்பாற்றேலாமல் கடைசியிலை செத்தவயின்ரை கதையைச் சொல்லவோ? செத்துச் சிதறிப்போன உடம்புக்குள்ளை கால் புதையுண்ண இழுத்துப் பறிச்சுக் கொண்டு ஓடி வந்து பாக்கேக்கை செல்லுக்கை ஆப்பிட்டுச் செத்துப் போய்க் கிடந்த தாய் தேப்பனை விட்டிட்டு வர மனமில்லாமல் அங்கையே இருக்கேக்கை மற்றச் செல் வந்து அடிச்சுச் செத்துப்போனவையின்ரை கதையைத்தான் சொல்லுறதோ? என்னத்தைச் சொல்ல..??? தொண்டைத் தண்ணிதான் காயிது.....

முதலி காலமை கதைக்கேக்கை தன்ரை கான் போனிலை வந்திருந்த ஒரு கவிதையைக் காட்டினான். ஜேர்மனியிலை இருந்து ஒரு தமிழ் பொம்பிளை அழுது அழுது எழுதின கவிதை அது.

........!!!!
கொதி வெயிலில்
பெரு மழையில்
பொதுவெளியில்
வீசி வெதும்பிய
வாலிப நிர்வாணங்களையும்
சிதறிச் சிதைந்த
என்னினச் சிசுக்களையும்
கண்ணிமைப் பொழுதேனும்
மறக்க வைக்க
உங்களால் முடியுமாக
இருந்தால்!
........?????????

- வில்லங்கம் விநாசி

எதிரொலி
Ethiroli



# தொடர்ச்சிகள்

## தமிழர் மீதான... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் மண்ணில் கால்பதித்து எமது இனத்தின் உரிமைக்காக உயிர்கொடுத்தவர்களை மனதில் நிறுத்தி பிரார்த்தனை செய்வதோடு, எம்மையும் மனதால் சுயபரிசோதனை செய்து கொள்வோம்.

முள்ளிவாய்க்கால் தியாக பூமி. தமிழினம் வரலாறாய் நிமிர செய்ய மக்கள் உதிரம் சிந்திய புண்ணிய பூமி.

முள்ளிவாய்க்கால் பேரவலத்தை சுமந்தவர்கள் அந்த அவலத்தில் இரத்தமும் சதையுமாக துயர் சுமந்த சாட்சிகள் இன்றும் அவர்களின் மனதை விட்டு நீங்காமல் காணப்படுகின்றது.

இந்நிலையில் மே 18 ஆம் திகதி 2009 ஆம் ஆண்டு தமிழருக்கு முள்ளிவாய்க்கால் பேரவலத்தை தந்த அரசுக்கு வாழ்த்தும் ஆசியும் வழங்கி தமிழர்களின் கூக்குரலுக்கு செவிசாய்க்காது இருந்தவர்கள் முள்ளிவாய்க்கால் பேரவலத்தை சிரமேற்றுக்கொண்டு அனுஷ்டிக்கின்றனர்.

இனவாத சக்திகளுக்கு எடுபிடிகளாக நின்று தமிழினத்தின் உரிமைகளை தாரைவார்க்க துணிந்து செயற்படும் எவரும் முள்ளிவாய்க்கால் மண்ணில் பாதங்களைப் பதித்தால் அந்த மண் அவமதிக்கப்படுவதுடன் அம்மண்ணும் அதனை ஏற்றுக்கொள்ளாது.

அன்று முள்ளிவாய்க்காலில் மக்கள் அழிந்து கொண்டிருக்கும்போது அரசுக்கு கொடிபிடித்துவிட்டு இன்று நினைவுநாளை அனுஷ்டிக்க மக்களை ஒற்றுமையாக அணிதிரளச்சொல்லும் சில தமிழ் அரசியல்வாதிகளின் மனங்களை நினைக்கும் போது வியப்பாக உள்ளது.

முள்ளிவாய்க்கால் மண் அவர் வேண்டாம், இவர் வேண்டாம் என்று எவரையும் ஒதுக்கப்போவது இல்லை. இதனால் எல்லோரும் ஒற்றுமையாக எவ்விதபேதமின்றி முள்ளிவாய்க்கால் மண்ணில் ஒன்று கூடுவோம்.

அரசியலை தமிழ்மக்களின் உதிரத்தாலும் கண்ணீராலும் உரமூட்ட முயலக்கூடாது. அவ்வாறு நாம் நடந்தால் வரலாறு எம்மை மன்னிக்கப்போவதில்லை.

இன்னமும் இனவெறி ஆட்சியாளர்களை ஆராதிப்பவர்களாக இருந்து கொண்டு முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் நினைவுநாள் மூலம் தம்மை தமிழ்தேசியவாதிகளாக வேடப்படுத்தி நிற்பவர்கள் யார் என்பதை முள்ளிவாய்க்கால் மண்ணில் தடம் பதிக்கும் நேரத்தில் கூட அவர்களாகவே உணராது விடின் இந்த மக்களும் காலமும் நிச்சயம் அவர்களை அடையாளம் காட்டும்" என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மே 18... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நினைவேந்தல் நிகழ்வை நடத்துவதற்கான ஒழுங்கமைப்புகளில் வடக்கு மாகாணசபைக்கும், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துக்கும் இடையில் நீடித்து வந்த இழுபறிகளுக்கு முடிவு காணப்பட்டு, அனைத்து தரப்புகளும் இணைந்து நினைவேந்தல் நிகழ்வை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இன்று காலை 11 மணியளவில் முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னத்தில் பிரதான சுடர் ஏற்றப்படும்.

முன்னதாக இன்று காலை யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து மாணவர்கள் பாரிய சைக்கிள் பேரணி ஒன்றை முள்ளிவாய்க்கால் நோக்கி நடத்தவுள்ளனர். இந்தப் பேரணி, முள்ளிவாய்க்காலை சென்றடைந்ததும், காலை 11 மணிக்கு நினைவுச் சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி நிகழ்வு இடம்பெறும். இந்த நிகழ்வில் பெருமளவு மக்களை பங்கேற்க வைப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. வாகன வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. நிகழ்வு ஒழுங்கமைப்பு, பங்கேற்கும் மக்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நடவடிக்கைகளில், வடக்கு மாகாணசபை, முன்னாள் போராளிகள், பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மைதானம் சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு, தயாராகியுள்ளது. நிகழ்விடத்தில் ஏற்பாடுகள் குறித்து வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அமைச்சர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவர்களும் நேரில் ஆராய்ந்தனர். இதற்கு முன் இருந்திராத வகையில் பெருமளவு மக்களை அணிதிரட்டி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை ஒழுங்குபடுத்துவதில் அனைத்து தரப்புகளும் தீவிர கவனம் செலுத்தி வருகின்றன.

அதேபோன்று வடக்கு மாகாண பாடசாலைகளில் இன்றையதினம் துக்கதினமாக கடைப்பிடிக்குமாறும் நினைவேந்தலை நடத்தும் வகையில் முற்பகல் 11 மணிக்கு மௌன வணக்கத்தை அனுஷ்டிக்குமாறும் வடக்கு கல்வியமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## நினைவேந்தலுக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சங்கானை, சண்டிலிப்பாய், மானிப்பாய் வழியே முள்ளிவாய்க்கால் செல்லும். கட்டைக்காட்டில் இருந்து (வடமராட்சி கிழக்கு) மருதங்கேணி ஊடாக ஒரு பேருந்து முள்ளிவாய்க்கால் செல்லும். அச்சுவேலி பேருந்து நிலையத்திலிருந்து பேருந்து புறப்பட்டு கோப்பாய் கைதடி வீதி வழியே முள்ளிவாய்க்கால் சென்றடையும். தொண்டைமானாறுச் சந்தியிலிருந்து ஒரு பேருந்து புறப்பட்டு வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, நெல்லியடி ஊடாகப் புதுக்காடு சென்று முள்ளிவாய்க்கால் சென்றடையும். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலிருந்து 2 பேருந்துகள் முள்ளிவாய்காலை நோக்கிப் புறப்படும்.

வவுனியா செட்டிகுளம் பிரதேச சபை முன்னால் இருந்து காலை 8.30 மணிக்கு ஒரு பேருந்து முள்ளிவாய்க்கால் நோக்கிப் புறப்படும். வவுனியா பேருந்து நிலையத்தில் இருந்து மூன்று பேருந்துகள் காலை 8.30 மணிக்கு முள்ளிவாய்க்கால் நோக்கிப் புறப்படும்.

மன்னார் அடம்பனிலிருந்து காலை 7 மணிக்கு முள்ளிவாய்க்கால் நோக்கிப் பேருந்து புறப்படும். தலைமன்னாரில் இருந்து பேருந்து காலை 7 மணிக்குப் புறப்பட்டு பேசாலை, தாழ்வுபாடு ஊடாக முள்ளிவாய்க்கால் நோக்கிச் செல்லும். கீரியிலிருந்து காலை 7 மணிக்குப் புறப்படும் பேருந்து எழுத்தூர் மன்னார் வழியாக முள்ளிவாய்க்கால் நோக்கிச் செல்லும். நானாட்டான் சந்தியிலிருந்து காலை 7 மணிக்குப் பேருந்து முள்ளிவாய்க்கால் நோக்கிப் புறப்படும். மடுவிலிருந்து காலை 7 மணிக்கு பேருந்து முள்ளிவாய்க்கால் நோக்கிப் புறப்படும்.

கிளிநொச்சி டிப்போ சந்தியிலிருந்து இரண்டு பேருந்துகள் 9 மணிக்கு முள்ளிவாய்க்கால் நோக்கிப் பயணிக்கும். கந்தசாமி கோயிலடியிலிருந்து 9 மணிக்கு ஒரு பேருந்து முள்ளிவாய்க்கால் நோக்கிப் புறப்படும்.பரந்தன் சந்தியிலிருந்து காலை 9 மணிக்கு ஒரு பேருந்து புறப்படும்.

முல்லைத்தீவு தேவிபுரம் சந்தியிலிருந்து காலை 9 மணிக்கு பேருந்து முள்ளிவாய்க்கால் நோக்கிப் புறப்படும். உடையார்கட்டு சந்தியிலிருந்து காலை 9 மணிக்கு பேருந்து முள்ளிவாய்க்கால் நோக்கிப் புறப்படும். புதுக்குடியிருப்பு சந்தியிலிருந்து காலை 9 மணிக்கு பேருந்துகள் இரண்டு முள்ளிவாய்க்காலை நோக்கிப் புறப்படும். விசுவமடு சந்தியிலிருந்து காலை 9 மணிக்கு பேருந்து முள்ளிவாய்க்கால் நோக்கிப் புறப்படும்.

துணுக்காய் பேருந்து நிலையத்திலிருந்து காலை 8.30 மணிக்கு பேருந்து ஒன்று முள்ளிவாய்க்கால் நோக்கிப் புறப்படும் ஒட்டுசுட்டான் சந்தியிலிருந்து காலை 9 மணிக்கு பேருந்து முள்ளிவாய்க்கால் நோக்கிப் புறப்படும். கொக்கிளாயிலிருந்து காலை 9 மணிக்கு பேருந்து முள்ளிவாய்க்கால் நோக்கிப் புறப்படும். முல்லைத்தீவு நகரிலிருந்து இரண்டு பேருந்துகள் முள்ளிவாய்க்கால் நோக்கி காலை 9 தொடக்கம் மு.பகல் 11 மணி வரை தொடர்ச்சியாகப் பேருந்து சேவையை நடைமுறைப்படுத்தும். அனைத்து மாவட்டங்களிலும் இருந்து வரும் மக்கள் அவர்கள் வந்த அதே பேருந்தில் திரும்பிச் செல்லவேண்டும்.

வேறு வாகனங்களை நாடாமல் வந்த வாகனத்தையே அடையாளம் வைத்து பயணிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## வேகம்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்து ஆராய்ந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

'நான் இலங்கையின் வெளிவிவகார அமைச்சரை சந்தித்தேன். சர்வதேச கடப்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பில் நாங்கள் ஆராய்ந்தோம். மாற்றம் நிகழும் வேகம் குறித்து பிரிட்டன் ஏமாற்றமடைந் துள்ளது இன்னும் பல நடவடிக்கைகள் இடம்பெறுவது அவசியம் என நான் இலங்கை வெளிவிவகார அமைச்சரிடம் தெரிவித்தேன் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## செல்கள்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களுக்கு பயிற்சி அளித்த வேளையில் மாணவர் ஒருவர் இவ்வாறு முள்ளிவாய்க்கால் நினைவுகளை தன் குறிப்பில் எழுதியுள்ளார்.

முள்ளிவாய்க்காலில் விழுந்த செல்கள் சடசட என்று வெடித்தன என்றும் இராணுவத்தினர் பெண்களை தறதற என்று இழுத்தனர் என்றும் எனது மனம் படபட என்று அடித்தது என்றும் அந்த மாணவர் தன் பாடக் குறிப்புப் புத்தகத்தில் எழுதியுள்ளார். தரம் ஒன்பதில் கல்வி கற்கும் இந்த மாணவர் முள்ளிவாய்க்கால் யுத்தத்தின்போது ஐந்து வயதுடைய குழந்தையாக இருந்துள்ளார்.

இத்தகைய நிகழ்வொன்றை சாதாரணமான வகுப்பறைச் செயற்பாடாக தன்னால் கடந்து செல்ல முடியவில்லை என்று குறித்த வகுப்பில் கற்பித்த ஆசிரியர் கூறுகிறார்.

## ரோசிக்கே... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரசன்ன ரணவீர கேள்வியெழுப்பியுள்ளார்.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

இன்று எரிபொருள் விலை, பஸ் கட்டணம் உள்ளிட்ட அனைத்தும் அதிகரித்துள்ளதாகவும், இதன் காரணமாக மக்களுக்கு வாழ்க்கையை கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அரசாங்கம் மக்களை ஏமாற்றி உள்ளது. மேலும் மக்களை ஏமாற்றாமல் புதிய அரசாங்கம் ஒன்றை உருவாக்க மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்று அவர் மேலும் கூறினார்.

## வடக்கில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்துள்ள விசேட அறிவித்தலில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தெற்கில் இடம்பெறும் அரசியல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் குறித்து நாம் கவனம் செலுத்தி வருகின்றோம். ஆனால் வடக்கில் இடம்பெறும் அரசியல் மாற்றம் குறித்து எவரும் கவனம் செலுத்துவதில்லை.

இந் நிலையில் 18,19 ஆம் திகதிகளை இம்முறை இராணுவ வெற்றி தினமாக கொண்டாடாது தேசிய வெற்றி தினமாக அனுஷ்டிக்க தீர்மானித்துள்ளோம். ஆனால் வட மாகாண சபையில் இத் தினத்தினை இன அழிப்பு தினம் எனவும் இந்த தினத்தை தேசிய துக்க தினமாகவும் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

எனவே நல்லாட்சி அரசாங்கம் ஏற்படுத்திக்கொடுத்துள்ள ஜனநாயக சூழலை பயன்படுத்தி வடக்கில் மீண்டும் பயங்கரவாத அல்லது ஈழவாத நகர்வுகள் பலமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

## யாழ். நகரிலுள்ள வெதுப்பகத்துக்கு சீல்

யாழ்ப்பாணம், மே 18

யாழ் நகரப்பகுதியில் இயங்கிவந்த முன்னணி வெதுப்பகம் (பேக்கரி) ஒன்று நேற்று சீல் வைக்கப்பட்டு மூடப்பட்டுள்ளது. சுகாதார விதிமுறைகளை மீறி செயற்பட்டதாக தெரிவித்து நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் மேற்படி வெதுப்பகம் மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வெதுப்பகத்தில் உணவு தயாரிக்கப்படும் இடத்தில் திருத்தவேலைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதனால் சுகாதார விதிமுறைகள் மீறப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஆகவே மே 18 ஆம் திகதி புலிகளை நினைவுகூரும் வகையில் வடக்கில் இடம்பெறும் சகல செயற்பாடுகளையும் அரசாங்கம் உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என்றார்.

## படையினரை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் அரசாங்கம் நாட்டுக்காக உயிர் தியாகம் செய்த வீரர்களை கௌரவிக்கவோ நினைவுகூரவோ தவறிவிட்டதெனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

எனவ மக்களாகிய நீங்களாவது அவர்களை நினைவு கூர்வதற்கும் போற்றுவதற்கும் மறக்கக்கூடாதெனவும் மஹிந்த குறிப்பிட்டுள்ளார்.

## மதுபோதை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாட்டப்பட்ட பெண் மன்றில் தோன்றாத காரண்த்தால், அவரைக் கைது செய்ய பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

யாழ்.இருபாலை சந்திப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நகர் நோக்கி பிளசர் ரக மோட்டார் சைக்கிளில் பயணித்த இளம் பெண்கள் இருவர் கட்டைப்பிராய் சந்திக்கு அருகில் விபத்துக்கு உள்ளாகினர். இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

விபத்துக்கு உள்ளானவர்களை வீதியில் சென்றவர்கள் மீட்ட போது, அவர்கள் இருவரும் போதையில் நிலை தடுமாறிய நிலையில் இருந்தமையால் அது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஊடாக பெண்கள் இருவரையும் அவ்விடத்தில் இருந்து மீட்டு யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்த்தனர்.

சிகிச்சை பெற்ற அவர்கள் இருவரும் வைத்தியசாலையிலிருந்து நேற்றுமுன்தினம் வெளியேறினர். அவர்களில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த பெண், பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்த நிலையில் மது போதையில் வாகனத்தைச் செலுத்தினார் என்ற குற்றச்சாட்டிலேயே பெண் ஒருவர் மீது யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

## அரசியலுக்காக... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"சர்வதேச உள்ளீடுகள் அல்லாத விசாரணை நன்மை பயக்காது என்பது இலங்கையில் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம். அது தம்பி மனோ கணேசனுக்கும் தெரியும்.

ஆனால், மனோகணேசன் அரசியல் காரணங்களுக்காகவே அவ்வாறு சொல்லியிருக்கலாம். நான் அவரின் கூற்றைக் காணவில்லை, அவ்வாறு அந்த கூற்றை முழுமையாக வாசித்துப் பார்க்கக்கிடைத்தால் அவர் எதற்காக அவ்வாறு கூறினார் என்பதைக் காணமுடியும். இதைவிட இதுதொடர்பில் மேலதிக விடயங்களை என்னால் கூறமுடியாது." என்றார்.


## தீபமேந்திய... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கு நிறுத்தப்பட்டிருந்தபோது அவ்வீதியால் சென்ற வெளிநாட்டு பெண் பிரஜை ஒருவர் பலருக்கு முன்னுதாரணமாக முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவு சுடர் ஏற்றியுள்ளார்.

வல்வெட்டித்துறையிலிருந்து ஆரம்பமான குறித்த வாகன ஊர்தி கிளிநொச்சி, மாங்குளம், ஓமந்தை ஊடாக நேற்று பிற்பகல் 12 மணியளவில் வவுனியாவை வந்தடைந்தது.

பழைய பேருந்து நிலையத்திலிருந்து பசார் வீதியூடாக சென்றபோதே குறித்த வெளிநாட்டு பிரஜை வாகனத்தில் ஏறி முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை தீபமேந்திய நினைவுச்சுடரினை ஏற்றி, இரு கரம் கூப்பி வழிபட்டு பலரை வியப்பில் ஆழ்த்தியுள்ளார்.

# கோப்பி தரும் எந்திரன்!



வொஷிங்டன், மே 18

அமெரிக்காவில் ரோபோ நடத்தும் 'கோப்பி ஷொப்' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. உலகளவில் தினமும் காலை எழுந்தவுடன், கோப்பி குடிக்கும் பழக்கம் பலருக்கும் உள்ளது. சில நேரங்களில் கடைகளில் கூட்டம் அதிகமாக இருக்கும். இதனால், கால தாமதம் ஏற்படும். இந்த நிலையில், அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோ நகரில், ரோபோ நடத்தும் கோப்பி ஷொப் அறிமுகப்படுத் தப்பட்டுள்ளது.

இதன் பெயர் 'கேப் எக்ஸ்' ஆகும். கை போன்ற வடிவில் இந்த ரோபோ வடிவமைக்கப்பட்டுள்ளது. கிண்ணத்தை எடுத்தல், கோப்பியை நிரப்புதல், வாடிக்கையாளர்களுக்கு வழங்குதல் போன்ற வேலைகளை, இந்த ரோபோ தானாகவே செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த ரோபோ ஒரு நபருக்கு கோப்பி வழங்குவதற்கு ஒருநிமிடத்துக்குக்குறைவான நேரத்தையே எடுத்துக் கொள்கிறது. ஒரு மணித்தியத்தில் 100 - 120 பேருக்கு கோப்பிகளை வழங்குகிறது. இதில், கோப்பிக் கொட்டைகளை நிரப்புதல் மற்றும் துப்பரவு செய்வது மட்டுமே மனிதர்களுடைய வேலை ஆகும்.

எதிர்வரும் 2019 ஆம் ஆண்டில், அமெரிக்கா வின் பல்வேறு பகுதிகளுக்கும் இதனை விரிவுபடுத் துவதற்கு அந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

வாடிக்கையாளர்கள் கோப்பியைப் பெற்றுக் கொள்வதற்கு 'டச் ஸ்கிரீன்' அல்லது 'கைபேசி அப்' ஆகியவற்றைப் பயன்படுத்தலாம்.

இங்கு 236 மில்லி லீற்றர் கோப்பியின் விலை 150 ரூபா ஆகும். இது அங்குள்ள கடைகளின் விலையை விடக் குறைவானதாகும்.

இந்த ரோபோவின் விலை 16.8 இலட்சம் ரூபா ஆகும். (ஆ)

# கர்நாடக முதலமைச்சராக பதவியேற்றார் எடியூரப்பா!



பெங்களூர், மே 18

கர்நாடக மாநிலத்தின் 23 ஆவது முதலமைச்சராக எடியூரப்பா நேற்றுப் பதவியேற்றார். அவருக்கு ஆளுநர் வாஜ்பாய் வாலா பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

கர்நாடக சட்டசபைத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. 104 இடங்களில் வென்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ள பா.ஜ.க. வேட்பாளரான எடியூரப்பா, ஆளுநரைச் சந்தித்து ஆட்சியமைக்க உரிமை கோரினார்.

அதேசமயம், மதச்சார்பற்ற ஜனதா தளம் ஆட்சியமைக்க காங்கிரஸ் ஆதரவு அளித்தது. இரு கட்சிகளும் இணைந்து பெரும்பான்மையுடன் கூட்டணி ஆட்சி அமைக்க முடிவு செய்தன. அதன்படி முதலமைச்சர் வேட்பாளராகத் தேர்வு செய்யப்பட்ட குமாரசாமி, ஆளுநரைச் சந்தித்து ஆட்சிய மைக்க உரிமை கோரினார்.

பா.ஜ.க.வுக்கு பெரும்பான்மை இல்லாத நிலையில், காங்கிரஸ் மற்றும் ம.ஜ.த. நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தங்கள் பக்கம் இழுக்க முயற்சி எடுத்து வருவதாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

ஆனால், திடீர் திருப்பமாக எடியூரப்பாவை ஆட்சியமைக்க ஆளுநர் வஜ்பாய் வாலா நேற்றுமுன்தினம் இரவு அழைப்பு விடுத்தார். மேலும், பதவியேற்ற நாளில் இருந்து 15 நாட்களில் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

கர்நாடகாவில் பா.ஜ.கவை ஆட்சியமைக்க ஆளுநர் அழைப்பு விடுத்ததை எதிர்த்து காங்கிரஸ் சார்பில் உச்சநீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் இரவு மனுத்தாக்கல் செய்யப்பட்டது. மனுவை உடனடியாக விசாரித்த உச்ச நீதிமன்றம், பதவியேற்புக்குத் தடை விதிக்க மறுத்து விட்டது.

இந்த நிலையில், ஆளுநரின் அழைப்பைத் தொடர்ந்து இந்தப் பதவியேற்பு நிகழ்வு இடம்பெற்றது.

இந்த விழாவில் மத்திய அமைச்சர்கள் ஜே.பி.நட்டா, தர்மேந்திர பிரதான், பிரகாஷ் ஜவடேகர் உள்ளிட்ட முக்கிய தலைவர்கள், கட்சி நிர்வாகிகள், அரச உயர் அதி காரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஆ)

# சிரியாவில் இரசாயனத் தாக்குதல்

## உறுதி செய்தது ஓ.பி.சி.டபிள்யூ!

டமஸ்காஸ், மே 18

சிரியாவின் சாராகேப் நகரில் கடந்த பெப்ரவரி மாதம் நடத்தப்பட்ட தாக்குதல், இரசாயனத்தாக்குதல்தான் என்று இரசாயன ஆயுதங்களுக்கு எதிரான சர்வதேச அமைப்பு (ஓ.பி. சி.டபிள்யூ) உறுதி செய்துள்ளது.

சிரியாவில் கடந்த 7 ஆண்டு களாக உள்நாட்டுப் போர் இடம் பெற்று வருகிறது. இந்த நிலையில், அங்குள்ள சாராகேப் நகரில் எதிர ணியினரைக் குறிவைத்து அரச படைகள் கடந்த பெப்ரவரி மாதம் இரசாயனத் தாக்குதல் நடத்தியதா கக் குற்றச்சாட்டு எழுந்தது. இதே போல், டூமா நகரில் கடந்த ஏப்ரல் மாதம் நடத்தப்பட்ட இரசாயனத் தாக்குதலில் 40 பேர் பலியானதாகத் தகவல்கள் வெளியாகின. இது தொடர்பான காணொளிக் காட்சிக ளும் வெளியாகி சர்வதேச அளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தின.

இதற்கிடையே, சிரியாவின் பல் வேறு பகுதிகள்மீது அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுக ளின் கூட்டுப் படை அண்மையில் தாக்குதல் நடத்தியன. இரசாயன ஆயுதத் தயாரிப்புக் கூடங்களை குறி வைத்து, இந்தத் தாக்குதல்கள் நடத் தப்பட்டதாக அப்போது தெரிவிக் கப்பட்டது.

இந்த நிலையில், நெதர்லாந்தின் தி ஹேக் நகரை தலைமையிடமாகக் கொண்டு செயற்படும் இரசாயன ஆயுதங்களுக்கு எதிரான சர்வதேச அமைப்பின் உண்மையைக் கண்டறி யும் குழுக்கள் சிரியாவில் ஆய்வு மேற்கொண்டன.

சாராகேப், டூமா ஆகிய நகரங்களில் இருந்து ஏராளமான மாதிரிகளைச் சேகரித்த அந்தக் குழுவினர், இர சாயனத் தாக்குதல் தொடர்பாக அங் குள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவருவோரிடமும் விசாரணை மேற்கொண்டனர். பின்னர், அந்த மாதிரிகள் ஓ.பி.சி.டபிள்யூவின் ஆய் வகங்களில்சோதனையிடப்பட்டன. இதில், சாரகேப் நகரில் குளோரின் நச்சு வாயுத் தாக்குதல் நடத்தப் பட்டது உறுதியாகி உள்ளது. இதே வேளை, டூமா நகரில் சேகரிக்கப் பட்ட மாதிரிகளின் சோதனை முடி வுகள் இன்னும் வரவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)



# ஜெருசலேமில் கவுதமாலா தூதரகம்

ஜெருசலேம், மே 18

இஸ்ரேலுக்கான தூதரகத்தை அமெ ரிக்காவை அடுத்து, க்வுதமாலாவும் ஜெருசலேம் நகரில் நேற்றுமுன்தினம் திறந்தது. ஜெருசலேமை இஸ்ரேல் நாட்டின் தலைநகராக அமெரிக்க ஜனா திபதி டொனால்ட் ட்ரம்ப் சமீபத்தில் அங்கீகரித்தார். இதனை அடுத்து, டெல் அவிவ் நகரில் இருந்த அமெரிக்கத் தூதரகத்தையும் சில நாட்களுக்கு முன் ஜெருசலேமுக்கு மாற்றினார். இதற்கு பலஸ்தீனர்கள் கடும் கண்டனம் தெரி வித்துள்ளனர். இஸ்ரேலுக்கு எதிராகக் காசா எல்லையில் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனை அடுத்து, அவர்கள் மீது இஸ்ரேல் இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியது. இதில், 59 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர். 2 ஆயிரத்து 400 பேர் படுகாயமடைந் தனர். (ஆ)

# மேற்கு வங்கத் தேர்தலில் திரிணாமுல் காங். முன்னிலை

கொல்கத்தா, மே 18

மேற்கு வங்க மாநிலத்தின் பஞ் சாயத்துத் தேர்தலில் ஆளுங்கட்சி யான திரிணாமுல் காங்கிரஸ் பெரும் பாலான இடங்களில் முன்னிலையில் உள்ளது.

மேற்கு வங்க மாநிலத்தில் கடந்த 14 ஆம் திகதி பஞ்சாயத்துத் தேர்தல் கள் நடைபெற்றன. 621 ஜில்லா பரிசித்துகளுக்கும், 6 ஆயிரத்து 123 பஞ்சாயத்து சமிதிகளுக்கும், 31 ஆயி ரத்து 802 கிராம பஞ்சாயத்துகளுக் கும் தேர்தல் அறிவிக்கப்பட்டு, பல் வேறு வன்முறைச் சம்பவங்களுக்கு மத்தியில் வாக்குப்பதிவு நடைபெற்று முடிந்தது.

இந்த நிலையில், நேற்றுக் காலை 8 மணி முதல் வாக்கு எண்ணிக்கை ஆரம்பமாகி உள்ளது. இதில், ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் வேட்பாளர்கள் ஆயிரத்து 800 கிராமப் பஞ்சாயத்து களில் முன்னிலை வகித்து வருகின்றனர்.

# கொரிய அமைதிக்கு வாய்ப்பளிக்க வேண்டும்



பீஜிங், மே 18

அணு ஆயுதச் சோதனைகளைக் கைவிட வடகொரியா ஒப்புக்கொண் டுள்ளது. இந்த நிலையில், கொரியத் தீபகற்பத்தில் அமைதியை நிலைநாட்ட அமெரிக்கா மகிழ்ச்சியுடன் வாய்ப்ப ளிக்க வேண்டும் என சீன வெளியு றவுத்துறை அமைச்சர் வாங் யி தெரிவித் துள்ளார்.

"அணு ஆயுதச் சோதனைகளைக் கைவிடுவதன் மூலம் வடகொரியா அமைதியை ஏற்படுத்த விரும்புகிறது. அதற்கு இதர நாடுகள் வாய்ப்பளிக்க வேண்டும். குறிப்பாக அமெரிக்கா கொரியத் தீபகற்பத்தில் அமைதியை நிலைநாட்ட ஒத்துழைக்க வேண்டும்." என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஆ)

# மகாபாரதத்தில் சல்மான்கான்?


சென்னை, மே 18

மகாபாரதம் படத்தில் நடிகர் சல் மான்கான் நடிக்க உள்ளார் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

ஆயிரம் கோடி ரூபா செலவில் மகா பாரதக் கதையை ஹிந்தியில் எடுக்க உள்ளனர். இந்தப் படத்தில் அமீர்கான் நடிப்பது ஏற்கனவே உறுதி செய்யப்பட்டு விட்டது. அவர் அர்ஜூனன் வேடத்தில் நடிக்கஉள்ளார்எனத்தெரிவிக்கப்படுகிறது. இதர கதாபாத்திரங்களுக்கும் நடிகர்-நடி கைகள் தேர்வு நடக்கிறது.

தற்போது சல்மான்கானும் இந்தப் படத்துக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு இருப் பதாகவும், அவர் கிருஷ்ணர் கதாபாத் திரத்தில் நடிக்க இருப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. 'பத்மாவத்' சரித்திரப் படத்தில் பத்மாவதியாக நடித்த தீபிகா படுகோனேவை மகாபாரதம் படத்தில் திரெளபதி வேடத்தில் நடிக்க வைக்கப் பேசி வருகின்றனர்.

மலையாளத்திலும் மகாபாரதக் கதை யைப் படமாக எடுக்கின்றனர். இந்தப் படத்தில் மோகன்லால் பீமனாகவும், நாகார்ஜூனா கர்ணனாகவும் நடிக்க உள் ளனர். (ஆ)






# மீண்டும் ரசாக்

இஸ்லாமாபாத், மே 18

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் அதிரடி சகலதுறை வீரர் அப்துல் ரசாக் 38 வயதில் மீண்டும் கிரிக்கெட்டுக்குத் திரும்புவதாக அறிவித்துள்ளார்.

குவைத்-இ-ஆஸம் தொடருக்கான கிரிக்கெட் தொடரில் ரசாக் ஆடவிருக்கிறார், இதன் மூலம் பாகிஸ்தான் சுப்பர் லீக்குக்கு திரும்ப உத்தேசித்துள்ளார் ரசாக்.

கடந்த சில வருடங்களாக பாகிஸ்தான் அணியில் வாய்ப்புக் கிடைக்காமையால் ரசாக் கிரிக்கெட்டிலிருந்து மறைந்து போனார். 2013 இல் தென்னாபிரிக்காவுக்கு எதிராக கடைசியாக ரி-20 போட்டியில் ஆடினார். உள்நாட்டு கிரிக்கெட்டில் 2015 இல் கடைசியாக ஆடினார். இவர் 46 டெஸ்ட் போட்டிகள், 265 ஒருநாள் போட்டிகள், 32 ரி-20 போட்டிகளில் விளையாடியுள்ளார். (அ)

# அவரே தலைவர்!

கொழும்பு, மே18

இலங்கைக் கிரிக்கெட்டின் தெரிவுக்குழுவின் தலைவரான கிரஹம் லெப்ரூப்பின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் அறிவித்துள்ளது.


கிரிக்கெட் தெரிவுக்குழுவின் ஏனைய உறுப்பினர்கள் எதிர்வரும் நாட்களில் நியமிக்கப்படுவார்கள் எனவும், இலங்கை கிரிக்கெட் நிறுவனம் அறிவித்துள்ளது. (அ)

# நீஷம், ப்றூம் அவுட்!

நியூஸிலாந்து, மே 18

நியூஸிலாந்து கிரிக்கெட் சபையின் 2018, 2019 பருவ காலத்துக்கான ஒப்பந்த வீரர்கள் பட்டியலில் சகலதுறை வீரர் ஜேம்ஸ் நீஷம், துடுப்பாட்ட வீரர் நீல் ப்றூம் ஆகியோர் உள்ளடக்கப்படவில்லை. இதேவேளை, சகலதுறை வீரர் டொட் அஸ்டில் முதன்முறையாக ஒப்பந்த வீரர்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ளார்.

அணி விபரம்: கோரி அன்டர்சன், டொட் அஸ்டில், ட்ரெண்ட் போல்ட், லொக்கி பெர்கியூஸன், கொலின் டி கிராண்ட்ஹொம், மார்டின் கப்தில், மற் ஹென்றி, டொம் லேதம், அடம் மில்ன், கொலின் மன்றோ, ஹென்றி நிக்கொல்ஸ், ஜீட் றாவல், மிற்சல் சான்ட்னெர், இஷ் சோதி, டிம் செளதி, றொஸ் டெய்லர், நீல் வக்னர், பி.ஜெவட்லிங், கேன் வில்லியம்சன், ஜோர்ஜ் வோர்க்கர். (அ)



# நாணயச் சுழற்சி இனியில்லை



லண்டன், மே 18

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பாரம்பரியமான நாணயச் சுழற்சி முறையைக் கைவிட சர்வதேச கிரிக்கெட் சபை பரிசீலித்து வருகிறது.

கிரிக்கெட் தொடங்கப்பட்ட காலம் முதலே, கிரிக்கெட்டில் ஒரு அணியின் துடுப்பாட்டம், பந்துவீச்சைத் தீர்மானிக்கும் நாணயச் சுழற்சி முறை இருந்து வருகிறது. கடந்த 1877ஆம் ஆண்டு இங்கிலாந்து மற்றும் அவுஸ்ரேலியா மோதிய போட்டியில் இந்த முறை ஆரம்பமானது. உள்நாட்டு அணித்தலைவர் நாணயத்தை சுழற்ற, வெளிநாட்டில் இருந்து வந்திருக்கும் எதிரணித் தலைவர் பூவா, தலையா என்று கேட்பார். டெஸ்ட் போட்டியை நடத்தும் நாடுகள், தங்களுக்கு சாதகமாக ஆடுகளத்தைத் தயார் செய்து விளையாடுகின்றன. இதனால் எதிரணிகளுக்குச் சிக்கல் ஏற்படுகின்றது.

ஆரம்பத்தில் இதுகுறித்து கண்டனங்கள் எழாமல் இருந்த நிலையில், சமீபகாலமாக இதற்கு எதிர்ப்புகள் கிளம்பின. இதனைத் தொடர்ந்து, நாணயச் சுழற்சி முறையை நீக்க ஐ.சி.சி முடிவு செய்துள்ளது.

அதன்படி, 2019ஆம் ஆண்டில் நடக்கும் டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் இந்த புதிய நடைமுறையை ஐ.சி.சி செயற்படுத்த இருக்கிறது. இனிமேல் வெளிநாட்டில் இருந்து விளையாட வந்திருக்கும் அணியின் தலைவரே பந்து வீசுவதா அல்லது துடுப்பாட்டம் செய்வதா என்பதை முடிவு செய்வார் என்று கூறப்படுகிறது.

இந்த நடைமுறை தொடர்பாக இம்மாத இறுதியில் நடைபெற உள்ள ஐ.சி.சி கூட்டத்தில் பேசி முடிவு எடுக்கப்பட இருக்கிறது. (அ)

# கடற்கரைக் கரப்பந்தில் பரு.மெதடிஸ் அரையிறுதிக்கு!




யாழ்ப்பாணம், மே 18

பெண்களுக்கான கடற்கரைக் கரப்பந்தாட்டத்தில் அரையிறுதிக்கு தகுதி பெற்றது பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை. வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான கடற்கரைக் கரப்பந்தாட்டம் வல்வை ரேவடி கடற்கரையில் நேற்று இடம்பெற்றது.

இதில் முதலில் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் வசாவிளான் மகா வித்தியாலயமும் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் மோதின.

மூன்று செற்களைக்கொண்ட இந்தச் சுற்றுப்போட்டியில் 21:19, 23:21 என்ற புள்ளிகளைப் பெற்று 2:0 என்றநேர் செற் கணக்கில் வென்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தப்பாடசாலை. (அ-66)

# ஜேர்மனி அணி அறிவிப்பு

பெர்லின், மே18

ரஷ்யாவில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள உதைபந்தாட்ட உலகக் கிண்ணத்துக்கான 27 பேர் கொண்ட ஆரம்ப கட்ட அணியை ஜேர்மனி அறிவித்துள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள அணியில், கடந்தாண்டு செப்ரெம்பரில் காலை முறித்துக் கொண்ட ஜேர்மனியக் கழகமான பெயார்ண் மியூனிச்சின் கோல் காப்பாளர் மனுவல் நோயரும் இடம்பெற்றுள்ளார்.

இந்நிலையில், கடந்த 2014ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை ஜேர்மனி வெல்லுவதற்கான க்ாரணமான மரியோ கோட்ஸே குறித்த அணியில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)



இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 18.05.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.